STC.No.193/2023 Dated:13.10.2025

PW.2 - சங்கையா

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே புகார்தாரர் தரப்பில் சாட்சி அளித்தேன் என்றால் சரிதான். எதிரி மாயகிருஷ்ணன் எனது உறவினரா என்றால் இல்லை, பழக்கமானவர். புகார்தாரரின் மனைவி முனிஸ்வரி என்பவர் எனது மனைவியின் உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். முனிஸ்வரியிடம் எதிரி எவ்வளவு தொகை கடன் வாங்கியிருந்தார் என்றால் ரூ.2 இலட்சம் கடன் வாங்கியிருந்தார். அதற்கு 2 சதவீதம் வட்டியாகும். முனிஸ்வரி மேற்படி தொகையினை கடனாக எதிரிக்கு கொடுக்கும் போது எந்த வித ஆவணத்தையும் எதிரியிடமிருந்து எழுதி வாங்கிகொள்ளவில்லை என்றால் சரிதான்.

2) நான் தான் உடனிருந்து முனிஸ்வரியிடம் பணம் வாங்கி எதிரிக்கு கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி எத்தனை மாதங்கள் வட்டி செலுத்தினார் என்றால் வட்டி எதுவும் செலுத்தவில்லை. எதிரி அசலும், வட்டியும் செலுத்தாததால் எதிரி மீது முனிஸ்வரி சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து தான் எதிரியிடமிருந்து முனிஸ்வரி இரண்டு காசோலைகளை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல, புகார்தாரர் அய்யனார் எனக்கு போன் செய்து வீட்டில் வைத்து எதிரி இரண்டு காசோலைகளை கொடுத்ததாக தகவல் சொன்னார், அந்த சமயம் நான் வெளியூரில் இருந்தேன். எதிரியை சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் காலையிலிருந்து மாலை வரை உட்காரவைத்து பணம் அல்லது காசோலை

கொடுக்க வேண்டும் என்று மிரட்டியே எதிரியிடமிருந்து காசோலை பெறப்பட்டது என்றாலும், அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரியல்ல. முனிஸ்வரி சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் சென்றதும், காசோலை கொடுத்ததும் எனக்கு தெரியாது, அந்த சமயம் நான் வெளியூரில் இருந்தேன்.

3) சிவகாசி கிழக்கு காவல் நிலைய ஆவணங்களை பார்வையிட்டால் உண்மையில் காசோலை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்பது தெரியவரும் என்றால் சரிதான், காசோலை வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது. எதிரி எந்த வங்கியின் காசோலையை எந்த தேதிகளில் கொடுத்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து தான் காசோலை பெறப்பட்டது என்பதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முனிஸ்வரி என்பவரிடம் வாங்கப்பட்ட கடனுக்காக புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு அவருக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.